தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஏ. சோமசுந்தரம், பி.எச்டி,.
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (உழவியல்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 13-8-2013

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## பருத்திக்கு நல்ல விலை கிடைக்கும்

அமெரிக்க வேளாண் துறை 2013-14 ஆம் ஆண்டில் சர்வதேச பருத்தி பரப்பு மற்றும் உற்பத்தி முறையே 33.7 மில்லியன் எக்டேராகவும், 118 மில்லியன் பொதிகளாகவும் இருக்குமென்று கணித்துள்ளது. இது 2012-13 ஆம் ஆண்டைக் காட்டிலும் முறையே 2 மற்றும் 3 சதவீதம் கூடுதலாகும். சர்வதேச பருத்தி கையிருப்பு 94.3 மில்லியன் பொதிகளாகக் கணிக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டைக் காட்டிலும் 10 சதவீதம் கூடுதலாகும். இதில் சீனாவின் பருத்தி இருப்பு மட்டும் 63 சதவீதம் ஆகும்.

2013-14 இல் உலக பருத்தி நுகர்வு 109.8 மில்லியன் பொதிகளாக இருக்குமென்று கணிக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டை விட 2 சதவீதம் கூடுதலாகும். சீனா, இந்தியா, அமெரிக்கா, பாகிஸ்தான் மற்றும் பிரேசில் ஆகிய நாடுகள் 2013ஆம் ஆண்டு சர்வதேச பருத்தி உற்பத்தியில் 78 சதவீதம் பங்களிக்கின்றன. சீனா மற்றும் அமெரிக்காவில் கணிக்கப்பட்டுள்ள குறைந்த உற்பத்தியை பிரேசில் மற்றும் இந்தியாவில் கணிக்கப்பட்டுள்ள உயர்ந்த உற்பத்தி ஈடு செய்யும்.

இந்தியப் பருத்தி ஆலோசனை வாரியத்தின் படி, இந்தியாவில் 2012-13 இல் 11.61 மில்லியன் எக்டரிலிருந்து 33.4 மில்லியன் பொதிகள் பருத்தி உற்பத்தி செய்யப்பட்டது. இது கடந்த ஆண்டை விட முறையே 5 மற்றும் 4 சதவீதம் குறைவாகும். இந்திய பருத்தி ஏற்றுமதி 2012-13ஆம் ஆண்டில் 2011-12 ஆம் ஆண்டைக் காட்டிலும் 37 சதவீதம் குறைந்துள்ளது. மேலும் இறக்குமதி 108 சதவீதம் அதிகரித்துள்ளது. 2012-13ஆம் ஆண்டின் பருத்தி கையிருப்பு 3.7 மில்லியன் பொதிகளாகக் கணிக்கப்பட்டுள்ளது. முக்கிய பருத்தி உற்பத்தி மாநிலங்களான குஜராத், மகாராஷ்டிரா, ஆந்திர பிரதேசம், ஹரியானா மற்றும் பஞ்சாப் ஆகியன இந்திய பருத்தி உற்பத்தியில் 80 சதவீதம் பங்களிக்கின்றன. இந்திய பருத்தி கூட்டமைப்பு அறிக்கையின் படி இந்த ஆண்டு நல்ல மழையின் காரணத்தால் கரீப் பருவ பருத்தி பயிரிடும் பரப்பு கடந்த ஆண்டை விட அதிகரித்துள்ளது. 2012-13 ஆம் ஆண்டில் 83.74 இலட்சம் எக்டேராக இருந்த கரீப் பருவ பருத்தி பயிரிடும் பரப்பு 2013-14 ஆண்டு 100.55 இலட்சம் எக்டேராக உயர்ந்துள்ளது.

பருத்தியை அதிக அளவு நுகரும் தமிழ்நாடு 2012-13 இல் 5 இலட்சம் பொதிகள் பருத்தியை உற்பத்தி செய்தது. இது 2011-12 ஆம் ஆண்டைக் காட்டிலும் 30 சதவீதம் குறைவாகும். தமிழக நூற்பாலைகள் தேவையான பருத்தியை குஜராத், மகாராஷ்டிரா, ஆந்திரப்பிரதேசம் மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களிலிருந்து கொள்முதல் செய்கின்றன. தமிழகத்தில் மாசி மற்றும் புரட்டாசி பட்டத்தில் பருத்தி பயிரிடப்படுகிறது. தற்பொழுது மாசியில் பயிரிடப்பட்ட பருத்தி தமிழக சந்தைகளுக்கு விற்பனைக்கு வந்து கொண்டிருக்கிறது.

மேலும் மற்ற மாநிலங்களிலிருந்து மிகக் குறைந்த அளவே பயிர் வரத்து உள்ளது. தற்போது விவசாயிகள் நீண்ட இழை பருத்திக்கு குவிண்டாலுக்கு ரூ.5200 முதல் 5500 வரை பெறுகின்றனர். வர்த்தக மூலங்கள் ஆகஸ்ட் மாத இறுதி வரை தமிழகத்தில் இருந்து மட்டும் பருத்தி வரத்து இருக்குமென்று தெரிவிக்கின்றனர். மேலும் வரும் மாதங்களில் பருத்திக்கான தேவை நிலையாக இருந்த பொழுதும், எதிர்பார்க்கப்படும் குறைந்த வரத்து விலையை உயரச் செய்யும்.

மேலும் காரீப் பருவ அறுவடை சமயமான அக்டோபர் முதல் டிசம்பர், 2013இல் அனைத்து முக்கிய பருத்தி பயிரிடும் மாநிலங்களிலிருந்து எதிர்பார்க்கப்படும் அதிக வரத்து பருத்தி விலையை நிலைப்படுத்தும். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இயங்கி வரும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையத்தின், ஆய்வு முடிவுகளும் ஆகஸ்ட் - செப்டம்பர் 2013 இல் பருத்தி விலை குவிண்டாலுக்கு ரூ.5000-5500 வரை இருக்குமென்று உறுதி செய்கின்றன. ஆகவே விவசாயிகள் முன்னறிவிப்பு விலையின் அடிப்படையில் விற்பனை முடிவுகளை எடுக்கலாம்.

தமிழக பருத்தி விதைப்பிற்கு ஆகஸ்டு பருவம் பிரத்யோகமான பருவமாகும். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தேசிய வேளாண் புதுமைத் திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம் கொங்கணாபுரம் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நிலவிய விலைகளை ஆய்வு செய்ததில் நீண்ட இழை பருத்திக்கு ஆகஸ்ட் பட்ட பருத்தி அறுவடை சமயமான ஜனவரி-பிப்ரவரி, 2014 இல் ரூ.4800-5100 வரை கிடைக்குமென்று கணித்துள்ளது.

சீனா மற்றும் அமெரிக்காவில் கணிக்கப்பட்டுள்ள குறைந்த உற்பத்தி, சீனாவின் அதிக இருப்பினால் எதிர்பார்க்கப்படும் குறைந்த ஏற்றுமதி மற்றும் முக்கிய நுகர்வு நாடுகளில் குறைந்த இருப்பு ஆகிய காரணங்களினால் பருத்தி விலை 2014, ஜனவரி-பிப்ரவரி மாதங்களில் குவிண்டாலுக்கு ரூ.4800-5100 வரை இருக்குமென்று கணித்துள்ளது. ஆகவே விவசாயிகள் ஆவணி - புரட்டாசி பட்டத்தில் பருத்தி பயிரிட அறிவுறுத்தப்படுகின்றனர்.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள :-</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம் ,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641003
தொலைபேசி: 0422-2431405

<u>தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் :-</u>

பேராசிரியர் மற்றும் தலைவர்
பருத்தி துறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641003,
தொலைபேசி: 0422-2456297

மக்கள் தொடர்பு அலுவலர்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஏ. சோமசுந்தரம், பி.எச்டி,.
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (உழவியல்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 13-8-2013

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## செப்டம்பர் 2013ல் தேங்காய் மற்றும் கொப்பரையின் விலை உயரும்

உணவு, பானம், நார் மற்றும் எரிபொருள் முதலிய பயன்பாட்டிற்கு தென்னை நம்நாட்டில் பயன்படுத்தப்படுகிறது. இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ் மற்றும் இந்தியா முதலியன தென்னை பயிர் செய்யும் முக்கிய நாடுகள் ஆகும். தென்னை பிரேசில், இலங்கை மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளிலும் பயிராகிறது. இந்திய அரசின் வேளாண் அமைச்சகத்தின் முதல் கணக்கீட்டின் படி 2012-13ல் 2.13 மில்லியன் எக்டரில் தென்னை பயிரிடப்பட்டு 15.35 மில்லியன் டன்கள் தேங்காய் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. கேரளா 35.92 சதம் பரப்பில் 25.89 சதம் உற்பத்தி செய்து முதல் இடத்தில் உள்ளது. அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு 21.81 சதம் பரப்பிலும் மற்றும் 31.02 சதம் உற்பத்தியிலும் பங்களிக்கிறது. தமிழ்நாட்டில் கோயம்புத்தூர், தஞ்சாவூர், கன்னியாகுமரி, வேலூர், ஈரோடு, தேனி, திருநெல்வேலி, கிருஷ்ணகிரி, சேலம் மற்றும் மதுரை ஆகியன தேங்காய் உற்பத்தி செய்யும் முக்கிய மாவட்டங்கள் ஆகும். தேங்காயின் மொத்த உற்பத்தியில் 65-70 சதம் எண்ணெய்க்காக பயன்படுத்தப்படுகிறது. தென்னை மற்றும் கொப்பரையின் விலை தேங்காய் எண்ணெய்யின் விலையைப் பொறுத்து அமையும். தேங்காயின் விலை அதன் தரத்தைப் பொறுத்து மாறுபடும். அதாவது பருப்பின் அளவு, கொப்பரையின் அளவு மற்றும் எண்ணெய்ச் சத்து முதலியன அதன் தரத்தை நிர்ணயிக்கின்றன.

வர்த்தக மூலங்களின் படி, இப்பருவத்தில் உற்பத்தி 30 சதம் குறைந்துள்ளது. கர்நாடகாவிலிருந்து வரத்து வரத் தொடங்கியுள்ளது. இது ஆகஸ்ட் மாதம் வரை நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தேங்காய் எண்ணெய் விலை குறைவிற்கு காரணம் பெரு நிறுவனங்களின் தேவைக் குறைவு, உள்ளூர் குறைந்த நுகர்வு, பிற நாடுகளுக்கு ஏற்றுமதிக் குறைவு மற்றும் மலிலான உணவு எண்ணெய் இறக்குமதி ஆகியன ஆகும். இவற்றால் சந்தையில் தேங்காய் எண்ணெய் உபரி ஆனது. தற்சமயம் அரசு கொப்பரை கிலோ ஒன்றுக்கு

ரூ.52.50க்கு கொள்முதல் செய்து வருகிறது. மொத்த சந்தையில் தேங்காய் எண்ணெய் விலை கிலோவிற்கு ரூ.63வும், கொப்பரை கிலோவிற்கு ரூ.45ம் மற்றும் தேங்காய் கிலோ ஒன்றுக்கு ரூ.10-12க்கும் விற்பனை ஆகிறது.

இந்த சூழ்நிலையில் விவசாயிகள் ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் 2013ல் தேங்காய் மற்றும் கொப்பரையின் விலை என்னவாக இருக்கும் என தெரிந்து கொள்ள ஆர்வமாக உள்ளனர். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இயங்கி வரும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையமானது, விவசாயிகள் சரியான சந்தை முடிவுகளை எடுக்க ஏதுவாக சந்தை ஆய்வு மற்றும் சந்தை நிலவரம் மற்றும் பொருளாதார பகுப்பாய்வு அடிப்படையில் பொள்ளாச்சி மற்றும் அவல்பூந்துறை சந்தையில் நிலவிய தேங்காய் மற்றும் கொப்பரையின் விலைகளை ஆய்வு செய்தது. ஆய்வு முடிவுகளின்படி தேங்காய் மற்றும் கொப்பரையின் விலை பொள்ளாச்சி மற்றும் அவல்பூந்துறை சந்தையில் ஆகஸ்ட் 2013ல் நிலையாகவும் செப்டம்பர் 2013ல் விலை அதிகரிக்கவும் வாய்ப்பு உள்ளது. தசரா மற்றும் தீபாவளி சமயங்களில் விலை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. மேலும் அக்டோபர் மாதத்திலிருந்து விலை உயர வாய்ப்பு உள்ளது.

ஆகஸ்ட் மாதத்தில் தேங்காயின் பண்ணை விலை பொள்ளாச்சியில் ஒரு காய்க்கு ரூபாய் 6 முதல் 7 வரையும் மற்றும் அவல்பூந்துறையிலும், இதர சந்தைகளிலும் கொப்பரைக்கு கிலோ ரூ.47 வரையிலும் கிடைக்க வாய்ப்பு உள்ளது. சிறந்த தரத்தின் காரணமாக பொள்ளாச்சி சந்தையில் தேங்காயின் விலை மற்ற சந்தைகளில் நிலவும் விலைகளை விட அதிகமாக இருக்கிறது. செப்டம்பர் மாதத்தில் ஒரு காய்க்கு பண்ணை அளவில் ரூ.1 முதல் 2 வரை அதிக விலையும், கொப்பரை கிலோவிற்கு ரூ.50 ஆகவும் இருக்க வாய்ப்புள்ளது. மேற்கண்ட தகவலின்படி விவசாயிகள் விற்பனை முடிவுகளை எடுக்கும்படி அறிவுறுத்தப்படுகின்றனர்.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள :-</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641003
தொலைபேசி: 0422-2431405

<u>மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் :-</u>

பேராசிரியர் மற்றும் தலைவர்
வாசனை மற்றும் நறுமணப் பொருட்கள் துறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641003
தொலைபேசி: 0422-6611284.

மக்கள் தொடர்பு அலுவலர்